DINAMALAR 23 JUL 09

# ஈஷா மையத்தில் செடிகள் வளர்க்க நாற்றங்கால் உருவாக்கும் மாணவிகள்





புதுச்சேரி கல்வித்துறை சுற்றுச் சூழல் பிரிவு மற்றும் தேசிய பசுமை சார்பில் ஈஷா யோகா மையத்தில் கதிர்காமம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் நாற்றங்காலுக்காக பாலிதீன் பைகளில் மண் கொட்டி நிரப்பினர். அருகில் பேராசிரியர் பூபதி, ஆசிரியர் குலசேகரன். **அடுத்த படம்:** மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றும் மாணவிகள்.

புதுச்சேரி, ஜூலை 23-

புதுச்சேரி கல்வித்துறை சுற்றுச் சூழல் பிரிவு தேசிய பசுமை படை சார்பில் ஈஷா மையத்தில் செடிகள் வளர்ப்புக்காக நாற்றங்கால் உருவாக்கும் பணியில் மாணவிகள் ஈடுபட்டனர்.

புதுச்சேரி இ.சி.ஆர்., சாலையில் உள்ள ஈஷா மையத்தில் மரங்கள் உருவாக்கி இலவசமாக வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் 15க்கும் மேற்பட்ட வகையான 10 லட்சம் மரக்கன்றுகள் உருவாக்கி புதுச்சேரி மாநிலம் முழுவதும் வளர்க்க இலவசமாக வழங்கி வருகின்றனர்.

அனைத்து பள்ளிகளிலிருந்தும் மாணவ, மாணவிகளுக்கு மரம் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் ஈஷா மையத்தில் ஒவ்வொரு நாளும் சுழற்சி முறையில் 40 முதல் 50 மாணவிகள் வரை செடிகள் வளர்க்கும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

கதிர்காமம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் தேசிய பசுமை படை பொறுப்பாளர் குலசேகரன், மாநில பயிற்சி மைய தேசிய பசுமை படை பிரிவு பொறுப்பாளர் பூபதி தலைமையில் நாற்றங்கால் உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர்.